# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.30/2018 நாள். 10–8–2018

## தனி அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2018 மாதம் அவசரக் கூட்டப்பொருள்

10–8–2018ம் நாள் வெள்ளிகிழமை காலை 11.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் அவசரக் கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்துர் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 48050 (தற்போதைய மக்கள் தொகை 54944), 4.00 ச.கி.மீ பரப்பளவும், 18 வார்டுகளையும் கொண்டதாகும். இந்நகராட்சியில் 13736 வீடுகளும், 321 வியாபார நிறுவனங்களும், 389 தெருக்களும் உள்ளன. இந்நகராட்சியில் 20 நிரந்தர துப்புரவு பணியாளர்களும், 120 தனியார் ஒப்பந்த துப்புரவு பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

மேற்படி வீடுகளிலிருந்து தினசரி 13.19 மெட்ரிக் டன் மற்றும் வியாபார நிறுவனங்களிருந்து 0.26 மெட்ரிக் டன் ஆகமொத்தம் 13.45 மெட்ரிக் டன் குப்பையை மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மக்கும்குப்பை = | 6.59 மெட்ரிக் டன் (50%) |
| மறுசுழற்சி கழிவுகள் = | 0.66 மெட்ரிக் டன் (05%) |
| உலர் கழிவுகள் = | 4.88 மெட்ரிக் டன் (35%) |
| கட்டிட கழிவுகள் மற்றும் வாருகால் மண் கழிவுகள் = | 1.32 மெட்ரிக் டன் (10%) |
| மொத்த கழிவுகள் = | 13.45 மெட்ரிக் டன் |

1. தினசரி உற்பத்தியாகும் திடக்கழிவுகளிலிருந்து 50 % சதவிகிதம் மக்கும் கழிவுகள் பிரிக்கப்பட்டு இ.பி காலனியில் அமைந்துள்ள 5 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பசுமை உரக்குடில் மூலம் 13 வார்டுகளில் உள்ள 9690 வீடுகளிலிருந்து 6 இலகுரக வாகனம் மூலம் 4.65 மெட்ரிக் டன் சேகரிக்கப்பட்டு பசுமை உரம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது.

மேலும் 3 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பசுமை உரக்குடில் (சண்முக முதலி தெரு) அமைக்கப்பட்டு, 5 வார்டுகளில் உள்ள 4046 வீடுகளிலிருந்து 3 இலகுரக வாகனம் மூலம் 1.94 மெட்ரிக் டன் சேகரிக்கப்பட்டு பசுமை உரம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது.

2. இத்துடன் கூடுதலாக 1 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 Onsite Compost சீனிவாசபுரம் மற்றும் கஸ்தூரிபாய் நகரில் உள்ள பூங்காக்களில் நிறுவப்பட்டு அருகில் உள்ள பகுதிகளிலிருந்து மக்கும் குப்பையினை சேகரித்து உரம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது.

   பசுமை உரக்குடில்களிலிருந்து தயார் செய்யப்பட்ட பசுமை உரம் பொது மக்களுக்கு மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அதிலிருந்து கிடைக்கும் வருவாய் துப்புரவு பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது.

3. மறுசுழற்ச்சி பிளாஸ்டிக் கழிவுகள் இந்நகரில் உள்ள 7 பழைய இரும்பு, பிளாஸ்டிக் பொருட்கள் வாங்கும் கடைகளில் ஒவ்வொரு பொருள்களுக்கும் இந்நகராட்சி மூலம் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, புதன்கிழமை தோறும் விற்பனை செய்து அதில் வரும் வருவாய் துப்புரவு பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது.
4. உலர் கழிவுகள் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பொருட்கள், துணிகள் மற்றும் இதர பொருட்கள் சேகரிக்கப்பட்டு எரியூட்டும் பணிக்காக அரியலூர் சிமெண்ட் நிறுவனத்திற்கு எடுத்து சென்று ஒப்படைக்க 10 ஆண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, ஒப்பந்த வாகனம் மூலம் மேற்படி நிறுவனத்திற்கு அனுப்பப்படுகிறது.
5. கட்டிட கழிவுகள் மற்றும் எதற்கும் பயனற்ற மற்ற கழிவு பொருட்கள் கல்மடுவு பகுதியில் உள்ள நகராட்சி குப்பைகளை கொட்டுவதற்கு வழங்கப்பட்ட பள்ளமான பகுதியை தேர்வு செய்யப்பட்டு அவற்றில் தனியாக கொட்டி வைக்கப்படுகிறது.

இந்நகராட்சியில் தினசரி உற்பத்தியாகும் 13.45 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை மேற்படி பணிகள் மூலம் அன்றைய தினமே 100 சதவிகிதம் தரம் பிரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி கையாளப்பட்டு வருகிறது. தற்போது பழைய குப்பை கிடங்கில் குப்பை கொட்டப்படுவது இல்லை. மேலும் இந்நகராட்சி பகுதிகளில் வீடு வீடாக குப்பை சேகரிக்கப்படுவதால் குப்பைத் தொட்டிகள் ஏதும் தெருக்களில் வைக்கப்படவில்லை.

எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–யை பின்பற்றி குப்பை கிடங்கற்ற நகரமாக அனகாபுத்தூர் நகராட்சியை மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு செயலாக்கத்தில் உள்ளதால், இந்நிலையில் அனகாபுத்தூர் நகராட்சியினை குப்பை கிடங்கற்ற மற்றும் குப்பைத் தொட்டிகள் அற்ற நகராட்சியாக அறிவிக்கை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>

1. அனுமதிக்கலாம்.
2. மேலும் ஏற்கனவே குப்பை கிடங்காக இருந்த இடத்தில் மேற்படி குப்பையை Bio-Mining மூலம் அகற்றிவிட்டு அவ்விடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**பொருள் எண். 2**

அனகாபுத்தூர் நகராட்சி 4.00 ச.கி.மீ. பரப்பளவுள்ள 18 வார்டுகள் கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும், 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள்தொகை 48050 ஆகும். இந்நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம் மூலம் 3 இலட்சம் லிட்டர் குடிநீரும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் 3 இலட்சம் லிட்டர் குடிநீரும், நகராட்சிக்குச் சொந்தமான நீராதாரங்கள் மூலம் 14.50 இலட்சம் லிட்டர் குடிநீரும் ஆக மொத்தம் 20.50 இலட்சம் லிட்டர் குடிநீர் தினசரி பெறப்பட்டு நபரொன்றுக்கு நாளொன்றுக்கு 54 (LPCD) லிட்டர் என்ற அளவில் 7 தினங்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்த குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குடிநீர் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் சீரான அழுத்தத்துடன் தினசரி விநியோகிக்க இயலாத நிலை உள்ளதால் District Metered Area (DMA) வகைப்படி நகரை பல்வேறு குடிநீர் மண்டலங்களாக பிரித்து பல மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்துக்கும் (Zone) தனித்தனியாக குடிநீர் வழங்கத்தக்க வகையான ஏற்பாடுகளுடன் நகராட்சியால் தயாரிக்கப்பட்ட Ideal Zonation Map மற்றும் அதனை செயல்படுத்த தேவைப்படும் உட்கட்டமைப்புகள், மதிப்பீடு உள்ளிட்டவைகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்திட நகர்மன்ற தீர்மானம் கோரப்பட்டுள்ளது.

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் அரசாணை எண்.162 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.12.2014ன்படி புதிய குடிநீர் திட்டப்பணி ரூ. 14.87 கோடிக்கு 01.03.2016 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு 35% சதவீத பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே, மேற்படி District Metered Area (DMA) வகைப்படி பணிமேற்கொண்டு ஒப்படைக்க கோரவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமிப்பதற்கு பதிலாக, மேற்படி வாரியம் மூலம் செய்யும் பணிக்கு செலவினத்தை Project Development Grand Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் பெற்று மேற்படி வாரியத்திற்கு வழங்க அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் அரசாணை எண்.162 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.12.2014ன்படி புதிய குடிநீர் திட்டப்பணி ரூ.14.87 கோடிக்கு 01.03.2016 அன்று பணி உத்திரவு

வழங்கப்பட்டு 35% சதவீத பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே, மேற்படி District Metered Area (DMA) வகைப்படி பணிமேற்கொண்டு ஒப்படைக்க கோரவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமிப்பதற்கு பதிலாக, மேற்படி வாரியம் மூலம் செய்யும் பணிக்கு செலவினத்தை Project Development Grand Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் பெற்று மேற்படி வாரியத்திற்கு வழங்க அனுமதிக்கலாம்.

<u>**பொருள் எண்.3**</u>

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண் 4(3)ன் படி திடக்கழிவுகளை உருவாக்குபவர்கள் நகராட்சி குப்பை தொட்டிகளில் சேகரிக்க / நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த சேவைக்கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

<u>**அட்டவனை–I**</u>

| **1. நிறுவனம்** | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | **மிக சிறியது** | **சிறியது** | **பெரியது** |
| i) | தனியார் பள்ளி/கல்லூரி விடுதி/தனியார் அலுவலக வளாகம். | மாதம் ஒன்றுக்கு | 200 | 300 | 500.00 |
| ii) | மருத்துவமனை(படுக்கையுடன்) | மாதம் ஒன்றுக்கு | 500 | 1000 | 1500.00 |
| iii) | கிளினிக் | மாதம் ஒன்றுக்கு | 200 | 350 | 500.00 |
| **2. வணிகம்** | | | | | |
| 1) | டீ ஸ்டால் / சிற்றுண்டி | மாதம் ஒன்றுக்கு | 50 | 75 | 100.00 |
| 2) | நடமாடும் உணவகம் | மாதம் ஒன்றுக்கு | 150 | 300 | 500.00 |
| 3) | உணவகம் | மாதம் ஒன்றுக்கு | 150 | 300 | 500.00 |
| 4) | வணிகவளாகம் | மாதம் ஒன்றுக்கு | 1000 | 2000 | 3000.00 |
| 5) | திருமணமண்டபம் | நிகழ்வு ஒன்றுக்கு | 300 | 500 | 1000.00 |
| 6) | மீன்/மட்டன் ஸ்டால் / சிக்கன் ஸ்டால் | மாதம் ஒன்றுக்கு | 200 | 500 | 1000.00 |
| 7) | பலசரக்கு கடை மற்றும் இதர பல்பொருள் அங்காடி | மாதம் ஒன்றுக்கு | 150 | 300 | 500.00 |
| 8) | சினிமா தியேட்டர் / பொழுது போக்கு மையம் | மாதம் ஒன்றுக்கு | 500 | 1000 | 1500.00 |
| 9) | பூ / காய்கறி / சில்லரை வியாபாரம் | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 10) | டெக்ஸ்டைல்ஸ் நிறுவனக் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 1000 | 1500 | 2000.00 |
| 11) | தோல் நிறுவனக் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 1000 | 2000 | 3000.00 |
| 12) | அனைத்து சிறு தொழில் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 1000 | 1500 | 2000.00 |
| 13) | நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் ஒர்க் ஷாப் | மாதம் ஒன்றுக்கு | 100 | 200 | 300.00 |
| 14) | பழைய சாமான்கள் சேகரித்தல் | மாதம் ஒன்றுக்கு | 100 | 150 | 200.00 |
| 15) | நகை கடை | மாதம் ஒன்றுக்கு | 200 | 500 | 1000.00 |
| 16) | பெட்ரோல் பங்க் | மாதம் | 300 | 500 | 1000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஒன்றுக்கு | | | |
| 17) | பிளாஸ்டிக் தயாரிப்பு | மாதம் ஒன்றுக்கு | 500 | 1000 | 1500.00 |
| 18) | மருந்து கடை | மாதம் ஒன்றுக்கு | 200 | 500 | 1000.00 |
| 19) | அட்டை பெட்டி தயாரித்தல் | மாதம் ஒன்றுக்கு | 500 | 1000 | 1500.00 |
| 20) | மின் உதிரிபாகங்கள் | மாதம் ஒன்றுக்கு | 100 | 150 | 200.00 |
| 21) | ஸ்டியோ | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 22) | தையல் கடை | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 23) | Xerox Shop | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 24) | செல்போன் ரீசார்ஜ் / கடை | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 25) | பிரிண்டிங் பிரஸ் | மாதம் ஒன்றுக்கு | 200 | 500 | 1000.00 |
| 26) | ஐயன் கடை | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 27) | சாமியான் கடை | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 28) | Lodge | மாதம் ஒன்றுக்கு | 500 | 1000 | 1500.00 |
| 29) | அழகு நிலையம் | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 30) | இரத்த பரிசோதனை | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 31) | பாத்திர கடை | மாதம் ஒன்றுக்கு | 50 | 100 | 500.00 |
| 32) | ஸ்டீல் பர்னிச்சர் | மாதம் ஒன்றுக்கு | 200 | 500 | 1000.00 |
| 33) | துணி கடை | மாதம் ஒன்றுக்கு | 200 | 500 | 1000.00 |
| 34) | வெல்டிங் ஓர்சாப் | மாதம் ஒன்றுக்கு | 100 | 200 | 300.00 |
| 3. மற்றவை | | | | | |
| | | | மிக சிறியது | சிறியது | பெரியது |
| அ | மரக்கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 500 | 750 | 1000.00 |
| ஆ | தோட்டக்கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 500 | 750 | 1000.00 |
| இ | கட்டடக் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 1000 | 1500 | 2000.00 |

<u>குறிப்பு</u>

i. அனகாபுத்தூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளில் அட்டவணை 1ல் குறிப்பிட்டுள்ளவாறு வரிசை எண் I முதல் IV வரை உள்ள தற்போதைய இனங்களுக்கு குப்பை உற்பத்தியாளருக்கும் சேவைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில் ஏற்படுத்தக்

| | |
|---|---|
| | கூடிய புதிய இனங்கள் மூலம் குப்பை உற்பத்தி செய்பவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் துணை விதிகளில் தெரிவித்துள்ள விவரப்படி அவ்வப்போது தேவைக்கேற்ப நகரமன்ற ஒப்புதலின் அடிப்படையில் உரிய துணை விதிகள் ஏற்படுத்தப்படும். |
| ii. | மேற்கண்ட அட்டவணை I ல் குறிப்பிட்டுள்ள இனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகை ஆண்டுக்கு ஒரு முறை 10 சதவீதம் உயர்த்தி வசூலிக்கப்படும். |

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி